**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே சார்நிலைக் கருவூலம் இல்லாத வட்டங்கள் அனைத்திலுமே புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியின் கொள்கை முடிவு. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையும் தீவிர பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**196—**

### தரம் உயர்த்துதல்

***7870—திரு. வே. குணசீலன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வந்தவாசி தொகுதி, தெள்ளாறில் உள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110 கி.வோ. துணை மின் நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, தெள்ளாறில் தற்போது 33/11 கி.வோ. துணை மின் நிலையம் 2 x 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளுடன் இயங்கி வருகிறது. இத்துணை மின் நிலையத்தின் உச்ச மின் பளு 12 எம்.வி.ஏ. ஆகும். இப்பகுதியிலுள்ள மின் பளு தேவையை நிறைவு செய்ய 33/11 கி.வோ. துணை மின் நிலையமே போதுமானது. எனவே, இந்தத் துணை மின் நிலையத்தை

*2013 ஏப்ரல் 10]*
*110/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

**திரு. வே. குணசீலன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் பொதுச் செயலாளர், தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. இந்தத் தொகுதியில் தெள்ளாறு ஊராட்சி ஒன்றியத்தில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. தொழிற்சாலைகள், கல்லூரிகள் மற்ற அபிவிருத்தித் திட்டங்கள் உள்ள அந்த ஒன்றியத்திலே 110 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதி, தெள்ளாறில் தற்போது இயங்கி வருகின்ற 33/11 திறன் கொண்ட துணை மின் நிலையத்திலே, ஏற்கெனவே 2 x 8=16 எம்.வி.ஏ. திறன் அளவிற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்தப் பகுதியினுடைய அதிகபட்ச மின் பளுவே 12 எம்.வி.ஏ. அளவிற்குத்தான் இருக்கிறது. இருக்கின்ற தேவைக்குட்பட்டே மின் பளு இருப்பதால், அங்கே புதிய 110/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் தேவையில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*தெள்ளாறில் 12 எம்.வி.ஏ. திறன் கொண்ட அளவிற்குத்தான் மின் பளு இருக்கிறது என்றாலும், பக்கத்தில் 14 கி.மீ. தூரத்தில், மாம்பட்டு என்ற இடத்தில் ஒரு புதிய 33/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் 2 x 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளுடன் அமைக்க பன்னிரண்டாவது திட்டக் காலத்திலே திட்டமிடப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த 33/11–ல் இங்கே இருக்கின்ற 12 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் பளுவை, 2 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் பளு அளவிற்கு மாம்பட்டு துணை மின் நிலையத்திற்கு மாற்றி அமைத்து,*

அதன்மூலமாக இந்தப் பகுதிகளினுடைய மின் தேவையைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பக்கத்தில் இருக்கக்கூடிய மாம்பட்டு என்ற இடத்திலே அமைய இருக்கும் துணை மின் நிலையத்தின்மூலமாக அந்தப் பகுதிக்கு வசதி செய்வதோடு மட்டுமல்லாமல், தெள்ளாறு பகுதியில் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய மின் பளுவின் அதிகரிப்பையும் இந்த மின்பளுவிற்குத் திருப்பிவிடுவதன் காரணமாக இந்தப் பகுதியிலே மின் அழுத்தப் பிரச்சினைகள் எப்போதும் வருவதற்கு வாய்ப்பு இல்லை என்பதால், இந்த வசதியே அந்தப் பகுதிக்குப் போதுமானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருவேளை, பிற்காலத்தில் அந்தப் பகுதியிலே தொழிற்சாலைகள் பெருகி, மின் பளு அதிகரிக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த மின் பளுவின் தேவைக்கேற்ப தரம் உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

**திரு. வே. குணசீலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி மிகவும் பின்தங்கிய பகுதி என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுபரிசீலனை செய்வதென்றால், இப்பொழுது 12 எம்.வி.ஏ. திறன் அளவிற்குத்தான் அங்கே மின் பளு இருக்கிறது. ஆனால், 16 எம்.வி.ஏ. திறன் அளவிற்கு அங்கே மின்மாற்றிகள் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே இருக்கும் 12 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியிலிருந்து மாம்பட்டு கிராமத்தில் புதியதாக அமைய இருக்கின்ற துணை மின் நிலையத்திற்கு 2 எம்.வி.ஏ. மின் பளு அளவிற்கு மாற்றுவதன் காரணமாக, தெள்ளாறில் 10 எம்.வி.ஏ. அளவிற்கு மின் பளு குறையும். 16 எம்.வி.ஏ. அளவிற்கு ஏற்கெனவே வசதி இருக்கிறது. 10 எம்.வி.ஏ.

*2013 ஏப்ரல் 10]*

*அளவிற்குத்தான் தேவை இருக்கும். எனவே, அங்கே புதியதாக அமைப்பதற்குத் தேவை இல்லை. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, அந்தப் பகுதியிலே மின் பளு அதிகரிக்குமானால், தேவைக்கேற்ப, துணை மின் நிலையத்தினைத் தரம் உயர்த்துவதற்கு நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

**திரு. உ. தனியரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் விவசாய நிலத்தில் வீடு கட்டி, மின் இணைப்பு கேட்டு, ஏறத்தாழ ஏழு மாத காலம் சிறு விவசாயிகள் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. அதிகாரிகளைக் கேட்டால் மின் கம்பம் பற்றாக்குறை இருக்கிறது என்கிறார்கள். 'தானே' புயல் வீசிய நாளிலிருந்து இன்று வரை அந்த நிலை நீடிக்கிறது. அதற்காக பதிவு மூப்பு அடிப்படையில் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, மின் கம்பம் பற்றாக்குறையைப் போக்கி, விவசாய நிலத்திலே வீடு கட்டி, மின் இணைப்பு கேட்டு, மாதக் கணக்கில் காத்திருக்கும் சிறு விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பிரச்சினை இருந்தது உண்மைதான். 'தானே' புயல் ஏற்பட்டபோது தமிழகத்தில் கையிருப்பிலே இருந்த அத்தனை மின் கம்பங்களும் அங்கே பயன்படுத்தப்பட்டுவிட்டன. பிற மாநிலங்களிலிருந்துகூட மின் கம்பங்களை வரவழைத்து அந்தப் பகுதிகளில் மின்சார விநியோகம் சீரமைக்கப்பட்டதை நீங்களே பார்த்திருப்பீர்கள். அதனால், பிற பகுதிகளிலேகூட மின் கம்பங்கள் பற்றாக்குறை சிறிய அளவில் ஏற்பட்டது. மின் கம்பங்கள்*

*பற்றாக்குறையைப் போக்குவதற்காக சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அந்த ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை அப்படியே கடைப்பிடித்ததன் காரணமாக சற்று காலதாமதம் ஏற்பட்டது. இப்போது ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் பணி முடிவுற்று, ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டு, மின் கம்பங்கள் தயாரிப்பதற்கு வேண்டிய ஆணைகள் வழங்கப்பட்டு, மின் கம்பங்கள் இப்போது வழங்கப்பட்டு வருகின்றன. மிக விரைவிலேயே, அநேகமாக இந்த மாதம் அல்லது அடுத்த மாதத்திற்குள்ளாகவே மின் கம்பங்கள் வழங்கப்படுவதில் பிரச்சினையே இருக்காது என்ற அளவிற்கு இப்போது மின் கம்பங்கள் சப்ளை அதிகரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இனிமேல் இந்தப் பிரச்சினை எழாமல் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**197—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

*16948—**திரு. சு. ரவி:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, முருங்கை ஊராட்சியில் 1,00,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*